**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற உயர்ந்தபட்ச தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்கீட்டு நியமம் | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 | மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 17,282,147 ஆன போதிலும் நியமத்தின் பிரகாரம் பொறுப்புகள் உள்ளடங்கும் வகையில் ரூபா 1,000,000 தொகையினை மாத்திரம் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 18 | நியமத்தின் பிரகாரம், கணனி லேசர் அச்சீட்டு இயந்திரம், பக்ஸ் இயந்திரம், தொலைபேசி ஆகிய சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்விடப்படும் சதவீதம் கணிப்பிடப்படுகையில் இச் சொத்துக்களின் எச்சப் பெறுமதி மற்றும் ஆயுட் காலம் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 8,525,406 பெறுமதியான குறுங்கால முதலீடு, ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மாகாண சபை நிதியத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட 10 ஒப்பந்தங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,557,961 தொகையான பொறுப்புக்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோர் மீதியில் 14% ஆகிய ரூபா 3,157,476 தொகையான கடன்பட்டோர் மீதி அறவிடப்பட முடியாதவையாக அதிகாரசபையில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இதற்காக 3% வருடாந்தம் அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தலின் போதுமான தன்மை குறித்து கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த 16 ஒப்பந்தங்களுக்காகப் பெறவேண்டிய ரூபா 4,722,340 தொகை கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது " நகமு புரவர" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரிசை அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,500,000

தொகையில் ரூபா 981,500 மாத்திரம் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதியான ரூபா 518,500 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 தொடர்ந்து இயங்குதல்

--------------------------------------

அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளின் போது முறையே ரூபா 12,841,863, ரூபா 12,869,156, மற்றும் ரூபா 6,124,654 ஆக பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் நடைமுறை விகிதம் முறையே 1:2.5, 1:2.8 மற்றும் 1:1.7 ஆக இருந்தமையால் அதிகாரசபை தொடர்ச்சியாக இயங்குவதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

2003 ஆம் ஆண்டு முதல் உரிய கிரயம் தீர்க்கப்படுவதற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உழைக்கும் வருமானம் போதாமையால் நானாவித கடன்பட்டோர் மீதியை அறவிட்டு சம்பளக் கொடுப்பனவிற்காக பயன்படுத்துவதற்கும், கடன்கொடுத்தோர் மீதியை தீர்க்காது விடுவதற்கும் நேர்ந்ததாகவும் இந் நிலை நடைமுறை விகிதம் பாதகமான நிலையை அடைவதற்கு முக்கிய காரணமாகத் தாக்கமளித்திருந்ததாக அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

--------------------------------------------------

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 3,875,150 தொகையான சேவை நாடுனர் கடன்பட்டோர் மீதி மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 1,585,314 தொகையான சேவை நாடுனர் முற்பணங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கணக்குகளின் படி முறையே ரூபா 2,262,134 மற்றும் ரூபா 20,984,863 ஆக இருந்ததனால் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளில் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 3,672,000 தொகையான 05 சேவை நாடுனர் கடன்பட்டோரிடம் இருந்து பெறவேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்கும் ரூபா 25,636,653 தொகையான 04 கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கும் அதிகாரசபை போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 12,667,999 தொகையான 03 கடன்கொடுத்தோர் மீதிகளுக்கும் ரூபா 18,945,075 தொகையான 02 கடன்பட்டோர் மீதிகளுக்கும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 104 | மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 164,738 பெறுமதியான விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி.225(1) | ஒவ்வொரு கொடுப்பனவிற்காகவுமான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் |

| | |
|---|---|
| | வரையான காலப்பகுதியின் போது உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,177,209 தொகையான விடுமுறை தின சம்பளத்திற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1997 மே 03 ஆம் திகதிய 11.8 (அ) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு மாதத்தில் ஒரு நாள் மாத்திரம் விடுமுறை தின சம்பளம் செலுத்தப்படக் கூடிய போதிலும் இதற்கு மேலதிகமாக ஒரு விடுமுறை நாளுக்காக ரூபா 79,961 தொகையான விடுமுறை தினச் சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 2.2.1 (ஆ) பந்தி | ஆண்டறிக்கை குறித்த கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் இற்றைவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் தேறிய இலாபம் ரூபா 27,293 ஆனதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான தேறிய நட்டம் ரூபா 16,768,236 ஆகக் காணப்பட்டது. மீளச் செலுத்தப்படலாகாது என இனங்காணப்பட்ட ரூபா 1,261,729 தொகையான கடன்கொடுத்தோர் மீதியும் ரூபா 484,103 தொகையான அட்டுறுக்காக மேலதிக ஏற்பாடும் வருமானமாகக் கணக்கிடப்பட்டமை மீளாய்வாண்டின் தேறிய இலாபத்திற்குக் காரணமாகியிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 செயலாற்றல்

--------------------

(அ) 2003 இன் 24 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் சபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவின் பிரகாரம், கூட்டு ஆதன முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை நிர்வகித்து கட்டுப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 66 கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அக் கூட்டு ஆதனங்களில் பதிவுசெய்யப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை 36 ஆகக் காணப்பட்டது. மேலும் அதிகாரச்சட்டத்தின் 5(ஏ) பிரிவின் பிரகாரம் கூட்டு ஆதனங்களின் பொது வசதிகள் பேணலுக்காக மாகாண கட்டுப்பாட்டு நிறுவகத்திற்கு கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 5(ஓ) பிரிவின் பிரகாரம் கூட்டு ஆதனத்தின் ஆதனங்கள் மீள அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை 130 ஆன போதிலும் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை 15 அளவில் இருந்தமையால் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்குரிய முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படும் முன்னேற்றம் மிகவும் குறைந்த வேகத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளர்யவாண்டின் போது தமது இலக்குகள் போதுமானவரையில் எய்தப்படுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| விடயம் | இலக்கிடப்பட்டவை | | செயலாற்றல் | செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரமான முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் | செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் | உள்ள படியானவை | சதவீதம் |
| - முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்படுவதனைப் பதிவுசெய்தல் | 290 | 260 | 130 | 50% |
| - முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் பதிவுகளை புதுப்பித்தல் | - | 30 | 15 | 50% |
| - கூட்டு ஆதனங்களை ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் | 200 | 180 | 67 | 37% |
| - கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல் | 90 | 89 | 66 | 74% |

### 2.2.2 கூட்டுத்திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்

கூட்டுத்திட்டத்தின் இலக்கிற்கும் வருடாந்த செயற்பாட்டுத்திட்ட இலக்குகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் கூட்டுத்திட்டத்தில் உள்ள இலக்குகளை எய்தப்படுவதற்காக குறுங்காலத் திட்டமாக செயற்பாட்டுத் திட்டம் பயன்படுத்தப்பட்டமையினை கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது. இலக்குகளை எய்தும் நிலைமை காலரீதியாக மீளாய்வு செய்யப்படும் ஆக்கபூர்வமான ஓர் முறைமை நிறுவகத்தில் இருக்கவில்லை. இதன் பிரகாரம் இலக்குகளை எய்தும் முன்னேற்றம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நலிவுகள் இனங்காணப்பட்டு இதற்கு முறையான தீர்வுகளை மேற்கொள்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக முகாமைத்துவம் போதிய கவனம்

செலுத்தியிருக்கவில்லை. இந் நிலை நிறுவகத்தின் நலிவான நிதி நிலைமைக்கும் தொடர் இயக்கத்திற்கும் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

**2.2.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2006 இன் 10 ஆம் இலக்க வரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபை தமது பதவியணியினர்களுக்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 92,825 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியினை உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக அதிகாரசபையினால் செலுத்தியிருந்தது.

**2.2.4 ஒப்பந்த நிர்வாகம்**

ஒப்பந்தங்களுக்காக கேள்விகள் கோரப்படுகையில் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 3.2.2 (அ) பந்தியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதிகாரசபையினால் ரூபா 7,763,910 தொகையான 37 ஒப்பந்தங்களுக்காக ஒரே ஒப்பந்தக்காரர்களுக்கு கடிதங்களை அனுப்பியதன் மூலம் கேள்விகள் கோரப்பட்டிருந்தன. கொள்வனவு நடைமுறைகள் பிரசித்தப்படுத்தப்படாததன் காரணமாக ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் ஒவ்வொரு கேள்விதாரர் மாத்திரமே முன்வந்திருந்ததுடன் தொடர்ச்சியாக அவ் ஒப்பந்தக்காரருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல்
(இ) மேலதிக நேர வேலை கொடுப்பனவு
(ஈ) முற்பணக் கொடுப்பனவு
(உ) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பேணல்